

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில், Core Banking Solutions (CBS) மற்றும் Cheque Truncation system (CTS) ஆகிய கட்டடங்களுக்கான திறப்பு விழாவில் தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அரசு முதன்மை செயலாளர் சத்ய பிரதா சாகு கலந்து கொண்டு புதிய கட்டடங்களை திறந்து வைத்து, ரூ. 66 லட்சம் மதிப்பீட்டில், கடன் உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் க.பா.அருளரசு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் மா. சந்தானம், பொது மேலாளர் தீனதயாளன், முதன்மை வருவாய் அலுவலர் சே.பால் ஜோசப், தலைமை அலுவலக அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அமெச்சூர் கபடி கழகம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் இணைந்து நடத்துகின்ற 51வது ஜூனியர் ஆண்கள் சாம்பியன்ஷிப் கபாடி போட்டி கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் துவங்கியது. இந்த கபாடி போட்டியில் தமிழகத்தின் சென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், கோவை, திருச்சி, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 20 க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றுள்ளது. இந்த போட்டியினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி, குண.வசந்தரசு உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் மேலும் இந்த கபாடி போட்டியில் சிறப்பு அழைப்பாளராக கபாடி போட்டியில் பங்கேற்று தங்கம் வென்று சாதனை படைத்த வெற்றியாளர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த கார்த்திகா, அபினேஷ் ஆகியோர் கலந்து கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவரின் கரங்களை வலுப்படுத்திட

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் - அதிகாரப்பூர்வ BDAகள் பட்டியல்!

DMK IT WING

## கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!



சென்னை, நவ.11 -

இந்திய ஜனநாயகப் போராளி கழகத் தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் அதிகாரப்பூர்வ BDAகள் பட்டியல் வெளியிடப்படுகிறது என, தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் - அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு :-

அனைத்து மக்களின் வாக்குரிமையையும் பாரபட்சமின்றி பாதுகாத்து ஜனநாயகத்தை நிலைநாட்டும் பணியில் நம் தலைவர் அவர்கள் தலைமையிலான மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே முழுமையாக ஈடுபட்டு வரும் நிலையில், SIR உள்ளிட்ட தேர்தல் களப் பணிகளில் உதவுவதற்காக தகவல் தொழில்நுட்ப அணியின் அதிகாரப்பூர்வ BDA பட்டியல் தி.மு.க. இணையதளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கழகத்தின் மாவட்ட- ஒன்றிய-நகர-பேரூக் கழகச் செயலாளர்கள் இந்த BDAக்களை, SIR குறித்து மக்களிடம் கழகம் மேற்கொள்ளும் விழிப்புணர்வு பணிகளிலும், படிவங்கள் நிரப்புவது, சரிபார்ப்பது உள்ளிட்ட அனைத்துப் பணிகளிலும் தவறாமல் பயன்படுத்திக் கொண்டு, இந்தியக் குடிமக்களின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போராடும் ஒரே தலைவரான நம் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்த வேண்டும் என கழக நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அளவில் ஒரு மாநிலத்தின் அனைத்து பாகங்களுக்கும் (பூத்) தனித் தனியே பாக டிஜிட்டல் ஏஜென்டுகள் பணியமர்த்திய ஒரே இயக்கம் நமது திராவிட நாயகன் அவர்களின் தலைமையில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே என்பது நமது கழகத்திற்கு கிடைத்திருக்கும் மகத்தான தனிப்பெரும் பெருமையாகும். ஜனநாயகத்தின் முதல் பாதுகாவலர் நமது தலைவரே. அவரது கரங்களை வலுப்படுத்த நமது இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களோடு கைகோர்த்து திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் உடன்பிறப்புகள் முன்களவீரர்களாக அணிவகுத்து நிற்பார்கள். கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பின்வரும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

https://www.dmk.in/ta/resources/bda-list/

இவ்வாறு அவ்வறிவிப்பில் அமைச்சர் டி.ஆர். பி.ராஜா அறிவித்துள்ளார்.

---

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக

# நாகையில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!



நாகை, நவ. 11 –

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட் டணி சார்பில் இன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்) கொண்டு வந்துள்ளது. சிறுபான்மையினர் வாக்குகள், பட்டியல் இன மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திடமுயன்றிருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர் திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்ப தாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.)வின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல்ஆணையம் திட்டமிடுகிறது.

எனவே, இந்த எஸ்.ஐ.ஆர் சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில்இந்தியத் தேர்தல் ஆணையம் உள்ளது.தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ். ஐ.ஆர்) கொண்டு வந்துள்ளதை கண்டித்து ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் இன்று 11 ம் தேதி செவ்வாய்க்கிழமை, அன்று காலை 10.00 மணியளவில் நாகையில் அவுரித்திடலில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்டத்தில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர், தொண்டர்கள், திராவிட முன்னேற்ற கழகதின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்பின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம்வெற்றி பெற செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகைமாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் தெரிவித்துள்ளனர்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சத்தியவாணிமுத்து அம்மையார்

### நவம்பர் 11 (1999)



தி.மு.க. தொடங்கப்பட்ட காலம் முதல் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

தி.மு.கழக ஆதிதிராவிட நல உரிமைப் பிரிவுத் தலைவராகவும் – மத்திய அமைச்சராகவும் – பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் தலைமையிலான அரசில் அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தன்னை சுயமரியாதைக் கொள்கைகளுக்கு முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமிழகம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரம் செய்தவர்.

“அறிவியக்க வீராங்கனையாகத் திகழ்ந்து அறிவார்ந்த சமுதாயம் காணத் தொண்டாற்றிய அம்மையார்” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகச் சார்பில் “பெரியார் விருது” பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


---

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக

# கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் – ஒய்.பிரகாஷ் அறிவிப்பு!





கிருஷ்ணகிரி, நவ. 11 -

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து கிருஷ்ணகிரி கிழக்கு & மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” இன்று நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர்கள் தே. மதியழகன், எம்.எல்.ஏ. , ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் SIRக்கு தொடக்கம் முதலில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல் ல்பட்டு தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ளது.

சிறுபான்மையினர் வாக்குகள், பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றிருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்ப தாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) வின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடு கிறது.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் எதிர்பார்த்தவாறே 04.11.2025.ஆம் தேதியிலிருந்து இன்று வரை களத்தில் S.I.R. பெரும்பாலான வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது. பெரும்பாலான இடங்களில் BLO க்கள் இன்று வரை கணக்கீட்டு படிவத்தை (Enumeration Form) தரத் துவங்கவில்லை. BLO க்களும், BLA 2 க்களுக்கும் இடையே சரியான தகவல் தொடர்புகளை ஏற்படுத்தபடவில்லை. அவர்கள் ஒருங்கிணைக்கப்படவில்லை.

சில இடங்களில் BLO க்கள் Enumeration Formஐ ஒரு நாளிலேயே பூர்த்தி செய்து தர வலியுறுத்துகிறார்கள்.

தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002 / 2005 வாக்காளர் பட்டியல்கள் குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன. எனவே இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ளதை கண்டித்து கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலோடு

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ‘மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி’ கட்சிகளின் சார்பில் இன்று (11.11.2025 - செவ்வாய்க் கிழமை) காலை 10 00 மணிக்கு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை எதிரே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் எம்.எல்.ஏ., தலைமையிலும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. வின் முன்னிலையிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளின் கண்டன உரையுடன் பிரமாண்ட மான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளில் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர், BLA 2, BLC உள்ளிட்ட வாக்குச்சாவடி முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர் .

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி

### நவம்பர் 11 (1989)



தென்னாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபாடு உடையவராகி மாணவப் பருவத்தில் சுயமரியாதை கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் பற்று கொண்டு தி.மு.க. துவக்கியநாள் முதல் அயராது பணியாற்றிய அஞ்சாநெஞ்சன்.

“கழகத்தின் வீரவேங்கை, சுயமரியாதைச்சுடர், மாவட்ட தளகர்த்தர், கழக உடன்பிறப்புகளுக்கு அரண்போல் விளங்கிய அடலேறு” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**